இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 311 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 07 – வெள்ளிக்கிழமை 21 ஜுன் 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 311 : Thiruvalluvar Year - 2055 - Aani 07 - Friday 21 June 2024 - Dak 8 Pages ₹ 5.00

## கள்ளக்குறிச்சி சம்பவம் - உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஆறுதல்! தலா ரூ.10 லட்சம் நிதி!

# விஷச் சாராயம்: அறிக்கை அளிக்க விசாரணை ஆணையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூன் 21-**

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்தும் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை - மற்றும் இதுகுறித்து அறிக்கை அளிக்க விசாரணை ஆணையம் அமைத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கருணாபுரம் காலனியில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியதால் 34 நபர்கள் உயிரிழந்துள்ளனர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

**சம்பவம் நடந்த இடத்திற்கு அமைச்சர்கள் விரைவு!**

இச்சம்பவத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளித்திட அறிவுறுத்தியுள்ளதோடு, பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து, ஆறுதல் தெரிவிக்க நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து, மீண்டும் இன்று அவர்களுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் கள்ளக்குறிச்சிக்குச் சென்றுள்ளார்.

இதுவரை இச்சம்பவத்தில் விஷச்சாராய விற்பனையில் தொடர்புடைய நான்கு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இதில் தீவிர விசாரணை மேற்கொண்டு, குறிப்பாக விஷச் சாராயம் தயாரிக்க மெத்தனாலை வழங்கியவர்களையும் கண்டறிந்து, அவர்கள் மீதும் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இச்சம்பவம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட காவல்துறை அலுவலர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும்பணியிட மாறுதல் செய்யப்பட்டுள்ளார்.

**தீவிர விசாரணைக்கும் மேல் நடவடிக்கைக்கும் உத்தரவு!**

மேலும் இதுகுறித்துத் தீர விசாரிக்கவும், உரிய மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டும், இவ்வழக்கு CBCID வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், உயிரிழந்தவர்களின்குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா பத்து இலட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இச்சம்பவம் தொடர்பாக, இன்று, அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல் துறை இயக்குநர், கூடுதல் காவல் துறை இயக்குநர் (மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு), மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அலுவலர்கள், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

**மெத்தனால் கலந்த சாராய இருப்பை முழுமையாக அழிக்க நடவடிக்கை!**

- மெத்தனால் கலந்த

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

> **“கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு, இது நிகழ்ந்ததற்கான அனைத்துக் காரணிகளைக் கண்டறியவும், எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் தமிழ்நாட்டில் மீண்டும் நடைபெறாமல் இருக்க, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனைகளை வழங்கிடவும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் பி.கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைத்திட உத்தரவிட்டுள்ளேன். இந்த ஆணையம், சம்பவம் குறித்து முழுமையாக விசாரித்து தனது பரிந்துரைகளை மூன்று மாதங்களுக்குள் வழங்கும்.”**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (20.6.2024) தலைமைச் செயலகத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் – முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘நீட்’ தேர்வு மோசடி: விளக்கம் அளிக்க

## தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் !

டெல்லி, ஜூன் 21-

நீட் தேர்வுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் ஒன்றிய அரசும், தேசிய தேர்வு முகமையும் உரிய விளக்கம் அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீட் தேர்வுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் விளக்கம் அளிக்கும்படி ஒன்றிய அரசுக்கும், தேசிய தேர்வு முகமைக்கும் நோட்டீஸ் அனுப்பி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீட் தேர்வுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அடுத்தடுத்து வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன. அந்தவகையில், தற்போது மேலும் 3 வழக்குகள் தொடரப்பட்டு, நேற்று விசாரணைக்கு வந்தன. அப்போது, மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், நீட் தேர்வு மோசடி குறித்து விசாரணை நடத்த தேசிய தேர்வு முகமை, குழு ஒன்றை அமைத்துள்ளதாகவும், ஆனால் இது ஒரு கண் துடைப்பு என்றும் குற்றம்சாட்டினார்.

ஓய்வுபெற்ற நீதிபதிகள் அடங்கிய சுதந்திரமான விசாரணைக் குழுவை அமைத்து, நீட் முறைகேடு தொடர்பாக விரிவாக விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

கருணை மதிப்பெண் வழங்கப்பட்ட ஆயிரத்து 563 மாணவர்கள் யார் என்பதை வெளிப்படையாக அறிவிக்க உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

நீட் மெரிட் பட்டியல் ஒரே பட்டியலாக நாடு முழுவதும் வெளியிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். மனுதாரர்கள் தரப்பு வைத்த கோரிக்கைகளை கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கில் விளக்கம் அளிக்கும்படி ஒன்றிய அரசுக்கும், தேசிய தேர்வு முகமைக்கும் நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டனர். மேலும், வழக்கு விசாரணையை ஜூலை 8ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

**தேசிய தேர்வு முகமை நடத்திய மூன்று தேர்விலும் குளறுபடி!**

மேலும் தேசிய தேர்வு முகமை நடப்பு ஆண்டு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வு, ஒன்றிய பல்கலைக் கழங்களில் மாணவர் சேர்க்கைக்கான க்யூட் தேர்வு மற்றும் கல்லூரிகளில் துணை பேராசிரியர் தகுதிக்கான நெட் தேர்வு ஆகிய 3 முக்கிய தேர்வுகளை நடத்தியது. இதில் நீட் தேர்வில் கேள்வித்தாள் கசிவு தொடர்பாக பீகார், குஜராத், ஹரியானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மேலும் கருணை மதிப்பெண் வழங்கியதில் மோசடி புகார் எழுந்ததை தொடர்ந்து 1,563 மாணவர்களுக்கு வழங்கிய கருணை மதிப்பெண்கள் ரத்து செய்யப்பட்டு, அவர்களுக்கு வரும் 23ஆம் தேதி மறுதேர்வு நடத்தப்பட உள்ளது.

இதேபோல், 18.06.2024 அன்று 11 லட்சத்து 21 ஆயிரம் பேர் பங்கேற்ற யுஜிசிநெட் தேர்வில் பெருமளவு முறைகேடு நடந்ததாக கூறி மறுநாளே தேர்வு திடீரென ரத்து செய்யப்பட்டது. சைபர் கிரைம் போலீசாருக்கு கிடைத்த விபரங் களின் அடிப்படையில் நெட் தேர்வு ரத்துசெய்யப்பட்டதாகவும், இது குறித்து சிபிஐ விசாரணை நடத்தும் என்றும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. எனினும் மோசடி தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், கடந்த மாதம் நடைபெற்ற க்யூட் தேர்விலும் முறைகேடு புகார் எழுந்தது. க்யூட் தேர்வு கடந்த மே 15 முதல் 24 வரை 7 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால், உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் 220 மாணவர்களுக்கு கேள்வித்தாள் மாற்றி வழங்கப்பட்டதாக அந்த தேர்வு மையத்தில் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இதேபோன்று இந்தூர், பீகார், கோவா, அசாம் ஆகிய மாநிலங்களிலும் நடைபெற இருந்த தேர்வுகள் பின்னர் 29ஆம் தேதிக்கு திடீரென ஒத்தி வைக்கப்பட்டன. அதே போன்று டெல்லி நொய்டா, பரிதாபாத், காசியாபாத், குருகிராம் ஆகிய இடங்களில் நடைபெற இருந்த தேர்வு முதல் நாள் இரவு திடீரென ரத்து செய்யப்பட்டு, மே 29ஆம் தேதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஒரு லட்சத்து 52 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்ற க்யூட் தேர்வு, எதற்காக மாற்றப்பட்டது என்பது குறித்து இதுவரை தேசிய தேர்வு முகமை வெளிப்படையாக தெரிவிக்கவில்லை. தேசிய தேர்வு முகமை நடப்பாண்டு நடத்திய மூன்று தேர்வுகளிலும் பல குளறுபடிகள் நடந்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

### ஒன்றிய அமைச்சர் வீடு முற்றுகை!

## ‘நீட்’ தேர்வை ரத்து செய்யக்கோரி போராட்டம்!

### ரூபாய் நோட்டுகளை வீசி காங்கிரசார் கண்டன முழக்கம்!

டெல்லி, ஜூன் 21-

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி காங்கிரஸ் சார்பில் போராட்டம் நடைபெற்றது. ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் வீடு முற்றுகையிடப்பட்டு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ரூபாய் நோட்டுகளை வீசியெறிந்து கண்டன முழக்கங்களை காங்கிரசார் எழுப்பினர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பணம்பெற்றுக்கொண்டு நீட் முறைகேடுகள் அரங்கேற்றப்பட்டதை கண்டித்து டெல்லியில் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வீடு முன்பு பணத்தை வீசியெறிந்து மாணவர் காங்கிரஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பணத்தை பெற்றுக் கொண்டு நீட் கேள்வித்தாளை கசியவிட்டது, பணம் பெற்றுக் கொண்டு ஆள்மாறாட்டம் செய்து நீட் தேர்வை எழுதியது என நீட் தேர்வில் ஏராளமான முறைகேடுகள் அரங்கேற்றப்பட்டன. இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், டெல்லி ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் வீட்டை முற்றுகையிட்டு மாணவர் காங்கிரஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தேசிய தேர்வு முகமையைக் கலைக்கவும், நீட் தேர்வை ரத்து செய்யவும் அப்போது வலியுறுத்தினர். மேலும், பணத்தை பெற்றுக் கொண்டு கல்வித் துறையில் முறைகேடு செய்யும் ஒன்றிய அரசை கண்டிக்கும் வகையில், பணத்தை வீசியெறிந்து முழக்கங்களை எழுப்பினர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் காங்கிரஸாரை காவல்துறையினர் கைது செய்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.



கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் கள்ளச்சாராயம் அருந்தி கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். தொடர்ந்து மருத்துவர்கள் தனி கவனம் செலுத்தி சிகிச்சை அளிக்க கேட்டுக்கொண்டார். மேலும் கருணாபுரம் பகுதியில் இறந்தவர்களுடைய வீடுகளுக்குச் சென்று ஆறுதல் கூறி தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்த நிவாரண உதவி ரூபாய் 10 லட்சம் காசோலையை வழங்கினார். உடன் அமைச்சர்கள் எ.வ. வேலு, மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன், நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன் ஆகியோர் இருந்தனர்.